මධ්‍යම අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம் 11

ஆண்டிறுதிப் பரீட்சை – 2023

பாடம்:- தமிழ் மொழியும் இலக்கியமும் - I, II

பாடசாலையின் பெயர்:- ……………………………………………..

சுட்டெண்:- ……………………… நேரம் :- 3.00 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. ‘‘விரிகுழல் பைந்தொடி நாணி வேத்தவையில்’’ இங்கு **‘‘நாணி’’** என்பது
 (1) வெட்கப்பட்டு (2) கோபத்துடன் (3) பொறாமையுடன் (4) அமைதியாக

2. ‘‘பெண்களுக்குத் தம்பதியே பெருந்தெய்வமென்பர்’’ இங்கு **‘பதி’’** என்பது
 (1) நாடு (2) கணவன் (3) அடிமை (4) மூடர்

3. ‘‘சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற’’ இங்கு **‘சுற்றத்தார்’** என்பதன் எதிர்ப்பதம்.
 (1) உறவினர் (2) பகைவர் (3) சான்றோர் (4) நண்பர்

4. ‘‘சூரியன் உதயமாவதைக் கண்டால் ஒருவன் ஓகோ விடிகிறது என்பான்’’ **‘உதயம்’** என்பதன் எதிர்ப்பதம்.
 (1) காலை (2) இரவு (3) பகல் (4) அஸ்தமனம்

5. ‘‘தேனருவி என வழியும் ஏருழவன் வியர்வை’’ இங்கு ‘உழவன்’ என்பதன் எதிர்ப்பாற் சொல்
 (1) உழவி (2) உழத்தி (3) உழச்சி (4) உழனி

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

6. இன்று சிறுவர்கள் கார்ட்டூன்(cartoon) பார்ப்பதில் பொழுதைப் போக்குகின்றனர். ‘cartoon’ என்பதன் தமிழ்வடிவம்
 (1) ஓவியம் (2) விளையாட்டு (3) கேலிச்சித்திரம் (4) கோட்டுச் சித்திரம்

7. நெல்லின் இளையது நாற்று என்பது போல வேம்பின் இளையது
 (1) குட்டி (2) பிள்ளை (3) வடலி (4) கன்று

8. பொருளால் வேறுபட்ட சொற்களைக் கொண்ட தொகுதி
 (1) புகழ், கீர்த்தி, மேன்மை (2) சொல், பதம், வார்த்தை
 (3) கண்டம், துண்டம், பாகம் (4) பனுவல், ஏடு, முடங்கல்

9. பழனம், கழனி, கமம் என்னும் பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்
 (1) வயல் (2) வீடு (3) நாடு (4) மலை

10. பசுவின் கூட்டம் நிரை என்பது போல மயிலின் கூட்டம்
 (1) கணம் (2) பந்தி (3) குழாம் (4) தொகுதி

11. புலவர் நினைத்த காரியம் கைகூடிற்று. இங்கு ‘‘கைகூடல்’’ என்பது
 (1) கையும் கையும் சேருதல் (2) ஒற்றுமை உண்டாதல்
 (3) ஒன்று சேருதல் (4) நிறைவேறுதல்

12. பட்டப்பகலில் கொள்ளையிட்டோர் கையும் களவுமாகக் கைது செய்யப்பட்டனர். இதில் வரும் ‘‘பட்டப்பகல்’’ என்பது
 (1) அடுக்குத்தொடர் (2) அடுக்கிடுக்குத் தொடர்
 (3) இலக்கணப்போலி (4) இணைமொழி

13. பின்வருவனவற்றுள் மென்றொடர் குற்றியலுகரம் எது?
(1) உலகம் (2) வண்டு (3) கொக்கு (4) சால்பு

14. அவன் தனக்குக் கிடைத்த பரிசை விட்டுக்கொடுத்தான். இங்கு **விட்டுக்கொடுத்தான்** என்பது,
(1) தன்வினை (2) கூட்டுவினை (3) பிறவினை (4) செயப்பாட்டு வினை

15. மற்றவருக்கு உபதேசம் செய்யும் ஒருவன் தான் மட்டும் வாழும் வகை தெரியாது கெடுவதைக் குறிக்கும் பழமொழி
(1) சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி
(2) கழுதைக்கு உபதேசம் காதிலே ஓதினாலும் அபயக் குரலே குரல்
(3) கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளையிலே தெரியும்
(4) ஊருக்குச் சாத்திரம் சொல்லுகிற பல்லி கூழ்ப்பானையிலே விழுந்ததாம்.

16. ‘‘இலையும் பழுப்பும் எங்கும் உண்டு’’ என்ற பழமொழியின் கருத்து
(1) பச்சை இலையும் பழுத்த இலையும் எல்லா மரங்களிலும் உண்டு.
(2) நரைத்த மயிரும் கறுத்த மயிரும் வயோதிபர் தலையில் உண்டு.
(3) எல்லோருக்கும் இன்ப துன்பங்கள் கலந்து வருவது இயற்கை
(4) இன்பத்தின் அருமை துன்பத்தை அனுபவிக்கும்போது தெரியும்.

17. அரிச்சந்திர மன்னனின் தியாக வாழ்க்கை பசுமரத்தாணி போல் மக்களின் மனதில் பதிந்துவிடுகின்றது. ‘‘பசுமரத்தாணி போல்’’ என்ற உவமைத் தொடரின் கருத்து
(1) ஆழப்புகுதல் (2) மென்மையாகப் புகுதல்
(3) நிலைநிறுத்துதல் (4) வெளிப்படாதிருத்தல்

18. சிப்பாய் இருவரைக் காணவில்லை என்று அதிபர் கூறினார். இங்கு ‘‘சிப்பாய்’’ என்பது
(1) பாரசிக மொழி (2) தெலுங்கு மொழி
(3) உருது மொழி (4) ஒல்லாந்து மொழி

19. ‘சும்மாடு’ என்பது எப்பிரதேச வழக்குச் சொல்
(1) வடக்கு (2) கிழக்கு (3) மலையகம் (4) தென்னிலங்கை

20. மலர் விழி சிரித்தாள். இங்கு இடம்பெற்றுள்ள தொகை?
(1) உவமைத்தொகை (2) வேற்றுமைத்தொகை
(3) வினைத்தொகை (4) அன்மொழித்தொகை

- **பின்வருவனவற்றுள் வினா ஒவ்வொன்றிற்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

21. கண்டான் என்ற சொல்லின சரியான சந்தி பிரிப்பு
(1) காண்+ட்+இன்+ஆன் (2) கண்டு+ ஆன்
(2) காண்+ட்+ஆன் (4) கா+ண்+ட்+ஆன்

22. ‘‘இறைவனை வழிபடாத வாணாள் முழுவதும் வீணே.’’ இங்கு ‘‘வாணாள்’’ என்பது
(1) இலக்கணப்போலி (2) மரூஉ (3) இடக்கரடக்கல் (4) குழூஉக்குறி

23. வேற்றுநிலை மெய்மயக்கம் இடம்பெற்றுள்ள சொல்
(1) பச்சை (2) பத்து (3) வெப்பம் (4) சொற்கள்

24. ஆசிரியர் கோபத்தோடு பேசினார். இது என்ன பொருளில் வந்துள்ளது.
(1) வரையறை (2) அடைமொழி (3) காரணம் (4) அனுபவப்பேறு

25. ஒரு பகுபதத்தில் குறைந்தபட்சம் எத்தனை உறுப்புகள் காணப்படும்?
(1) ஆறு (2) மூன்று (3) இரண்டு (4) நான்கு

26. ‘‘ச’’ உச்சரிப்பில் வேறுபடும் சொல்
(1) சனம் (2) மஞ்சள் (3) சொல் (4) செயல்

27. பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சி அல்லாதது
(1) பல்லழகு (2) ஆணழகன் (3) பாலாடை (4) வேலெறிந்தான்

28. பறவை வானத்தில் மிக மிக வேகமாகப் பறந்தது. இங்கு மிக மிக வேகமாக என்பது,
(1) பெயர்த்தொடர் (2) வினைத்தொடர்
(2) பெயரடைத்தெடர் (4) வினையடைத்தெடர்

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவுசெய்க**

29. (1) தனிப்பெயரடை : பெரிய, சிவந்த, நல்ல
(2) கூட்டுப்பெயரடை : அழகான, பண்புள்ள, சிறப்பான
(3) தனி வினையடை : மெல்ல, நாளை, அமைதியாக
(4) கூட்டு வினையடை : வேகமாய், கருணையாக, பண்பாக

30. (1) செய்வினை : படித்தான், வெட்டினான், எழுதினான்
(2) செயப்பாட்டு வினை : எழுதப்பட்டது, உருட்டப்பட்டது, கட்டப்பட்டது
(3) தன்வினை : படித்தான், ஊட்டினான், கற்றான்
(4) தனிவினை : வந்தான், கேட்டான், உண்டான்

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. எதிரியைக் கண்ட இடத்தில் கைதுசெய்யும்படி நீதிபதியால் …………… அனுப்பப்பட்டது
(1) அழைப்பாணை (2) பரிந்துரை (3) பிடியாணை (4) பிரேரணை

32. விபத்தால் ஏற்படக்கூடிய இழப்பை நிவர்த்திப்பதற்குத் தனி நபரோ நிறுவனமோ முன்கூட்டியே செய்வது ………………… ஆகும்.
(1) சேமிப்பு (2) முதலீடு (3) காப்புறுதி (4) மானியம்

33. “சிரித்த பங்கயமொத்த செங்கண் இராமன்” இங்கு பயின்று வந்த அணி ……….அணியாகும்.
(1) உருவகம் (2)தற்குறிப்பேற்றம் (3) உவமை (4) உயர்வுநவிற்சி

34. நாட்டில் காணாமல் போனோர் பற்றி விசாரிப்பதற்கு ஜனாதிபதியால் …………… நியமிக்கப்பட்டது.
(1) ஆணைக்குழு (2) விசாரணைக்குழு
(3) தேடுதல் குழு (4) வேட்பாளர் குழு

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.**

35. மாமரத்திலிருந்த மாம்பிஞ்சுகள் நோய் காரணமாக பொல பொலவென …………
(1) விழுந்தது (2) விழுந்தன (3) விழுந்தவை (4) விழுகின்றது

36. திருவிழா ஒவ்வொரு,
(1) கோயில்களிலும் சிறப்பாக நடைபெறுகின்றது.
(2) கோயிலிலும் சிறப்பாக நடைபெறுகின்றது.
(3) கோயில்களிலும் சிறப்பாக நடைபெறுகின்றன.
(4) கோயிலிலும் சிறப்பாக நடைபெறுகின்றன.

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்க விடை தருக.**

மகாவலிகங் கைப்புனலாந் தாவணியை வீசி
மாதிரமெ லாம்மணக்கும் வாசணையைப் பூசி
காவலரின் கண் மருட்டும் கன்னி எங்கள் தேயம்
காசினிய ளிவளைப்போற் கன்னியில்லை யில்லை

செந்தமிழுஞ் சிங்களமு மாயவிரு தோழி
சேவைசெய்யும் இராசகன்னி ஈழமெங்கள் தேயம்
இந்தியரெம் அக்கைமக்கள் என்றணைக்கும் அம்மை
வந்தனையல் லாதெமக்குச் சிந்தனைவே றில்லை

37. இப்பாடலில் வெளிப்படும் பிரதான கருத்து
(1) கன்னியின் அழகு (2) நீர் வளம் (3) மொழிகளின் சிறப்பு (4) நாட்டின் சிறப்பு

38. “புனலாந் தாவணி” என்பது,
(1) உவமை அணி (2) உருவக அணி
(3) தற்குறிப்பேற்ற அணி (4) உயர்வுநவிற்சி அணி

39. காவலரின் கண்களை மருட்டுவது,
(1) கன்னி (2) தேயம் (3) புனல் (4) தமிழ்

- **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.**

40. (அ) காவலாளரைக் கவனிக்குமாறு என்னைப் பணித்திருக்கிறார்.
(ஆ) அது அரசரின் கட்டளையாகும்.
(இ) அரண்மனைத் தோப்பிலுள்ள மரங்களில் யாரும் பழங்களைப் பறிக்கக் கூடாது.
(ஈ) தோப்புக்குக் காவலாகவும் சிலரை அவர் போட்டிருக்கிறார்.
(உ) பறித்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும்.
(1) இ, உ, அ, ஆ, ஈ (2) இ, ஈ, உ, அ, ஆ
(3) இ, ஆ, ஈ, உ, அ (4) ஈ, அ, ஆ, உ, இ

(40 புள்ளிகள்)

பகுதி – II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. சுருக்கமான விடை எழுதுக.

i. ‘உண்பதுவு முறங்குவது மூர்க்கதைகள் பேசுவதும்’ என்ற தொடரை சந்தி பிரித்து எழுதுக.

ii. பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.
வள்ளுவத்தில் யாதானும் நாடாமல் ஊராமல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

iii. ‘தொலை’ என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

iv. பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவை இனங்கண்டு திருத்தி எழுதுக.
விபுலானந்த அடிகளார் தாம் கற்றறிந்த விஞ்ஞானப் பெரும் புலமையைக் கொண்டும் கணித அறிவைக் கொண்டும் பல பெரும் ஆராய்ச்சியைச் செய்தார்.

v. பின்வரும் வாக்கியத்திலுள்ள எழுவாய் பயனிலைகளை இனங்கண்டு எழுதுக.
பகல் எல்லாம் தண்ணொளியை நல்கிவிட்டு மேல்வானில் அஸ்தமிக்கும் சூரியன்போல அவள் முகம் செக்கர் படிந்து மங்கியது.

vi. பின்வரும் தன்வினை வாக்கியத்தை பிறவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
அப்பா கட்டடத்தைக் கட்டினார்

vii. ‘நீ கவனமாக நடந்துவந்தால் ஆற்றைக் கடந்துபோவாய்’ இவற்றில் இடம்பெறும் தலைமைத்தொடர் மற்றும் சார்புத் தொடர்களை வேறுபடுத்தி எழுதுக.

viii. ‘களித்து ரசித்திட்ட காட்சிகள் தொலைந்திட வந்து சேர்ந்தது மாபெரும் யுத்தமே’ என்ற வரியில் இடம்பெற்றுள்ள இரு குற்றியலுகரச்சொற்களை இனங்கண்டு அவை எவ்வகைக் குற்றியலுகரம் எனக்குறிப்பிடுக.

ix. வித்துவச் செருக்குடைய காலமேகப்புலவர் வசைக்கவி பாடுவதில் வல்லவர். மேற்படி கூட்டுவாக்கியத்தினை தனி வாக்கியங்களாக எழுதுக.

x. உறவுமுறைக் கடிதத்திற்கும் தொழில்முறைக் கடிதத்திற்கும் இடையிலான வேறுபாட்டினைத் தருக.

(20 புள்ளிகள்)

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக. தெரிவுசெய்த விடயத்திற்குப் பொருத்தமான தலைப்பு இடுக.**

அ. இன்றைய பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் எமது நாட்டைப் பொறுத்தவரையில் அத்தியவசியப் பொருட்களுக்கான விலைகள் மிகவும் அதிகரித்த நிலையிலே காணப்படுகின்றன. இதனால் மக்கள் பெரும் இன்னல்களின் மத்தியிலே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். விலை அதிகரிப்பினால் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் அதனைத் தீர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்பதனைத் தெளிவுறுத்தும் வகையில் அமைந்த விளக்கக் கட்டுரை.

ஆ. இன்று மாணவர்களின் தேவைப்பாடுகளில் ஒன்றாக கல்வியோடு சேர்த்து ஒழுக்க விழுமியங்கள் முக்கியம் பெற்று விளங்குகின்றன. எனக்கருதும் ஒருவருக்கும், பாடசாலைகளில் கல்வியோடு மாணவர்களுக்கு ஒழுக்கமும் போதிக்கப்படுகின்றது. எனக் கருதும் மற்றொருவருக்கும் இடையில் நடைபெறும் உரையாடல்.

இ. அதிகரித்து வரும் சனத்தொகை வளர்ச்சியின் காரணமாக மனிதர்களுடைய தேவைப்பாடுகளும் அதிகரித்தவண்ணம் காணப்படுகின்றன. அந்தவகையில்தான் போக்குவரத்து சாதனங்களின் பாவனையும் அதிகரித்துள்ளது. இதனால் நாளுக்கு நாள் வீதி விபத்துக்களே அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. அதிலும் இளைஞர்களே அதிகம் விபத்துக்குள்ளாகின்றனர். வீதி விபத்துக்கள் பற்றிய விளிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு மேடைப்பேச்சு.

ஈ. வரிய குடும்பத்தில் மூத்த ஆண்பிள்ளையாகப் பிறந்த சரவணன் க.பொ.த. உயர்தரம் கற்றுக்கொண்டிருந்த வேளையில் தனது தந்தையை இழக்கின்றான். தனது குடும்ப நிலையினைக் கருத்திற்கொண்டு விடுமுறை நாட்களில் தொழிலுக்குச் சென்று அதன்மூலம் கிடைக்கும் பணத்தினைக் கொண்டு குடும்பச் செலவுகளையும் கல்விச் செலவுகளையும் மேற்கொண்டு வருகின்றான். இதனை அடிப்படையாகக்கொண்டு ஒரு சிறுகதை எழுதுக.

(25 புள்ளிகள்)

**03. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 40 – 45 சொற்களில் சுருக்கி எழுதுக.**

தனிநாயக அடிகளார் பொதுவாக மக்கள் எண்ணுகிற மாதிரியான தமிழ்ப் பெரியார் அல்லர். ஆழமான அறிவின் விளைவாக, அமைதியான தோற்றத்துடன் ஆறுதலாகச் சிந்தித்துப் பேசும் அறிஞர் அவர். எந்த விஷயத்தையிட்டும் ஆழமாக ஆராய்ந்து பேசும் பண்புள்ள அறிஞர். தமிழ்மொழி அறிவு மட்டுமல்லாது பல வளர்ச்சியடைந்த மொழிகளின் அறிவைப் பெற்றிருந்ததினால், நிதானத்துடனும் பிற பண்பாடுகளை மதித்தும் பேசும் தன்மை கொண்டிருந்தார்.

அடிகளார் இரண்டு முக்கிய தொண்டுகளை ஆற்றனார். அந்த இரண்டையும் பொறுத்து, அவரை விடப் பிறர் கூடுதலாகத் தொண்டாற்றியுள்ளனர் என்று கூற முடியாது. ஒன்று தமிழியல் என்னும் துறை உருவாகவும் அது பற்றிய அறிவு ஆங்கிலம் வழியாகச் சர்வதேச அறிவுத்துறையாக உயர்த்தினார். இதற்கு முதன்முறையாக ஆங்கிலத்திலே தமிழ்ப் பண்பாடு பற்றிய சஞ்சிகையை (Tamil culture) தொடக்கி நடத்தினார்.

இரண்டாவதாக, சர்வதேசத் தமிழர் மத்தியில் ஓர் ஒற்றுமையுணர்வை முதல் முறையாக வளர்க்க உதவினார். தமிழ்நாடு, இலங்கை, மலேசியா ஆகிய மூன்று நாடுகளிலும் வாழ்ந்த தமிழரிடையே தான் முன்பு இத்தகைய உணர்வு காணப்பட்டது. ஆனால் தனிநாயக அடிகளார் உலகின் மூலை முடுக்குகளில் வாழும் தமிழரைப் பற்றிய ஆய்வு நடாத்தி, அங்கெல்லாம் சென்று தமிழ் உணர்வைப் பரப்பி உலகத்தமிழர்

பற்றிய அறிவை வளர்த்து ஓர் ஒற்றுமையுணர்வையும் ஏற்படுத்தினார். இவையே இவரை ஒரு தனித்துவமான தமிழ்ப் பெரியாராக மாற்றி வைத்துள்ளன.

**04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

பழைய தமிழ் நூல்களை முன்யோர் பனையோலைகளில் எழுதிவைத்தனர். இக்காலத்தைப்போன்று எழுதுகருவிகள் இல்லை. முற்காலத்தில் புலவர்களிடம், நூல்கள் ஓலைச்சுவடிகளாக இருக்கும். வேண்டிய நூல்கள் எல்லாம் ஒரு புலவரிடம் கிடைப்பதருமை. சிலரிடம் சில நூல்கள்தான் இருக்கும். அவர்கள் அவற்றை எளிதில் பிறருக்கு கொடார். ஏனெனில் நூலை எழுதலோ எழுதுவித்தலோ மிகவும் கடினமான செயலாகும். புலவரின் சந்ததியார் கல்லாதவராயின் ஓலைச்சுவடிகள் பரண்மீதேறும். அங்கிருந்து எடுப்பாரின்மையினால் மடிந்துபோதலும் செல்லரித்தலும் உண்டு. மூவேந்தர்களும் வள்ளல்களும் இறந்தபின்பு, தமிழ்நாடு நிலைபெற்ற அரசாட்சி இன்மையால் சீர்குலைந்தது. தமிழ் வளர்ச்சி குன்றியது.

1. முன்னோர்கள் நூல்களை எவற்றில் எழுதிவைத்தனர்?
2. ஓலைச்சுவடிகள் பரண்மீது ஏறுவதற்கான காரணம் யாது?
3. பரண்மீது வைக்கப்பட்ட சுவடிகளின் நிலை என்ன?
4. புலவர்கள் தன்னிடம் இருக்கும் ஓலைச்சுவடிகளைப் பிறருக்குக் கொடுக்காமைக்கான காரணம் யாது?
5. தமிழ் வளர்ச்சி குன்றக்காரணமாக இருந்தது யாது?

(10 புள்ளிகள்)

05. தற்போது எமது நாட்டில் அதிகரித்து வரும் மின்சாரக்கட்டணம் அதிகரித்துக்கொண்டு செல்வதனால் ஏற்படும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி மின்சாரக் கட்டணத்தைப் பொதுமக்களின் வசதிக்கு ஏற்ப சீர்திருத்தித் தரும்படி வலியுறுத்தி மின்சார சபைத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

பொலித்தீன் பாவனை இன்று மிக வேகமாக அதிகரித்துவருகிறது. ஆதனால் சூழல் மாசடைகின்றது. அதனை மீள் சுழற்சி செய்வது, இல்லாது ஒழிப்பது என்பன சவாலான விடயங்களாக உள்ளன. ஆகவே பொலித்தீன் பாவனையைக் குறைத்துக் கொள்வது தொடர்பில் பொதுமக்களிடத்து விளிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 100 சொற்களில் ஒரு துண்டுப்பிரசுரம் எழுதுக.

(15 புள்ளிகள்)

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் | |
|---|---|
| 11 | ஆண்டிறுதிப் பரீட்சை – 2023<br>பாடம்:- தமிழ் மொழியும் இலக்கியமும் - III |

பாடசாலையின் பெயர்:- …………………………………………….

சுட்டெண்:- ……………………… நேரம் :- 2.00 மணிக்தியாலம்

## பகுதி – III

- அறிவுறுத்தலுக்கு ஏற்ப **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.

01. சுருக்கமான விடை எழுதுக.

i. தெள்ளியவாலின் சிறுபழத்தொரு விதை
தெண்ணீர் கயத்துட் சிறு மீன் சினையினும்'
அ. ஆலமரத்தின் சிறிய விதை எவ்விதம் சிறப்பிக்கப்படுகின்றது?
ஆ. தெண்ணீர் என்பதைப் பிரித்து எழுதுக.

ii. 'யாத்த தேருருளைப்படு மேழைதான்
யாண்டு தேர் செலு மாங்கிழுப் புற்றெனக்
கோத்த சிந்தனையோ டேகி'
அ. பாரதியின் காதலின் முக்கியத்துவம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?
ஆ. இங்கு இடம்பெறும் அணி எது?

iii. 'நாத மூன்றுரு வான குற் றால
நாத ராரிய நாடெங்கள் நாடே'
அ. நாதம் என்பதன் பொருள் என்ன?
ஆ. மூன்றுருவாகப் போற்றப்படுபவர்கள் யாவர்?

iv. 'கோக்கள் வைகு முற்றத்தான் முதற்றேவி
மூன்றுலகு மீன்றானை'
அ. கோக்கள் வைகு முற்றத்தான் யார்?
ஆ. மூன்றுலகுமீன்றவள் என அழைக்கபட்டவர் யார்?

v. 'ஏன்கா ராவயில மட்டும் பக்குல் கத்துது?' அடக்கமுடியாமல் கேட்டேன்.
அ. இத்தொடரின்மூலம் வெளிப்படுத்தப்படும் உணர்ச்சி யாது?
ஆ. அடக்கமுடியாது கேட்டவர் யார்?

vi. 'இடது கையின் பெருவிரலை ஊன்றி
வெட்கிச் சிரித்தன் அது ஒரு செத்த சிரிப்பு'
அ. இங்கு கல்வியறிவு இன்மையை வெளிப்படுத்தும் தொடர் எது?
ஆ. செத்த சிரிப்பு என்பதன் பொருள் என்ன?

vii. 'முத்து ஊர் வெம்பணிக் கொடியோன் மூதூரில்
நடந்து உழவர் முன்றில் தோறும்'
அ. முந்தூர், மூதூர் என்பதனை விளக்குக.
ஆ. வெம்பணிக் கொடியோன் எனச் சுட்டப்படுபவர் யார்?

viii. 'கூட்டிற் பசுங்கிளிபோற் கோதையரை யெப்பொழுதும்
வீட்டி லடைத்து வைக்கும் விரகிலர்க் கியாதுரைப்பேன்'
அ. விரகிலர் எனப்படுபவர் யார்?
ஆ. பெண்ணடிமைத்தனம் எவ்வாறு வலியுறுத்தப்படுகிறது?

ix. ‘அது தன்னிடமுள்ள சூட்சுமத்தை எல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்து விடத்தொடங்கியது’

அ. அது என சுட்டப்படுவது என்ன?

ஆ. சூட்சுமம் என்பதன் விளக்கம் யாது?

x. ‘சமணரும், புத்தரும் இசைக் கலை, நாடகக் கலை போன்ற கலைகளை வெறுத்தாராயினும் இளங்கோவடிகள், திருத்தக்க தேவர் போன்றோர்…’

அ. வெறுக்கப்பட்ட கலைகள் எவை?

ஆ. இங்கு குறிப்பிடப்படும் எழுத்தாளர்களையும் அவர்களது இலக்கியங்களையும் தருக.

(20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட்பகுதிகளையும் உரைப் பகுதிகளையும் வாசித்து, அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. பங்க பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட்டெறியக் குரங்கிளநீர்
தனைக் கொண்டெறியும் தமிழ்நாடா
கொங்கர்க் கமராபதியளித்த
கோவே யிராச குலத்திலகா
வெங்கட் பிறைக்குங் கரும் பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே’

(அ) தமிழ் நாட்டுத் தலைவனின் வீரம் வெளிப்படுத்தப்படும் விதம் யாது?

(ஆ) தலைவியின் பிரிவுத்துயர் பற்றிக் குறிப்பிடுக.

ii. வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பர்
கவனசித்தர் வந்து வந்து காய சித்தி விளைப்பர்
தேனருவி திரையெழுப்பி வானின் வழி யொழுக்கும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேனியலங்காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

(அ) மலையில் இடம்பெறும் செயற்பாடுகள் எவை?

(ஆ) கையாளப்பட்டுள்ள அணிச் சிறப்புகளை விளக்குக.

iii. குஞ்சிருக்கும் கூட்டினுக்கு இரையெடுத்துச் சென்று
குனிந்தகால் இரையூட்டும் குருவிகளின் பாசம்
நெஞ்சகத்தை நிறைத்திருக்கும் நிர்மலமாம் வானில்
நிறைமதி தன் துணைவியர்கள் சூழவரும் கோலம்
மஞ்செனவே திரண்ட முகில் பரவுகின்ற வானில்
பரிதியொளி வீசியெழும் பரவசமாம் ஜாலம்
கொஞ்சி மகிழ்ந்தோடி விளையாடிவரும் அணில்கள்
கூரைகளில் கூடுகட்டல் கோடியழகன்றோ.

(அ) இங்கு இடம்பெறும் வாழ்வியல் அம்சங்களை விளக்குக.

(ஆ) வின்வெளிச் சிறப்புகள் எவ்விதம் வெளிப்படுத்தப்படுகின்றன.

iv. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உலகெங்கும் அறிவொளி பரப்பி இலட்சிய சமநோக்கிலே நிலைபெற்ற புத்திபடைத்த நாம் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் தொடக்கம் அமைந்துள்ள இழிநிலையிலிருந்து விடுதலைபெறவும் மீண்டும் அகில உலகிற்கு அறிவொளி பரப்பும் பண்டைய நிலையினை அடையவும் நமக்கு வழிகாட்டிகளாகத் தோன்றிய காந்தியடிகளையும், ஏனைய இலட்சிய சமத்துவவாதிகளையும் வழத்தி நின்று நாமும் இலட்சிய சமநோக்டகிலே மறுமலர்ச்சி அடைவோமாக.

(அ) ஏன் இலட்சிய சமநோக்கம் மறுமலர்ச்சியடைய வேண்டும்?

(ஆ) இலட்சிய சமநோக்கம் மறுமலர்ச்சி அடைய யாது செய்யவேண்டும்?

v. இந்தக் கிராமத்தின் முடிசூடா குட்டி ராணியாய் பொது மனிஷியாய் மூத்தம்மாதான் இருந்தா. அனுபவம் பழுத்த அவவிடம் அறிவு தேஜஸ் சட்டெனத் தெரியும். நானும் மூத்தவாப்பாவும் காட்டிற்குப் போய் ஆமணக்குக் கொட்டை பொறுக்கிக்கொடுப்போம் அதை இடித்து உருக்கி உளுவரிசியும் நன்னாரிவேரும் நறுக்குப்போட்டு எண்ணெயாய் காய்ச்சி தலைக்குப் பூசுவா. அவவின் கரு கருவென்ற தலைமுடிக்கு அதுதான் பஸ்பம். எனக்கும் அதைத்தான் அப்பிவிடுவா. மூத்தவாப்பா எண்ணெய் போடமாட்டார். 'அங்கப்பாரு மனெ உண்ட மூத்தவாப்பா தலைய' 'சூப்பின பனங்கொட்ட மாதிரி' என கிழவனை சீண்டி கொடுப்பினுள் சிரித்துக்கொள்வா.

(அ) மூத்தம்மாவின் கரு கருவென்ற தலைமுடிக்குக் காரணம் என்ன?

(ஆ) மூத்தம்மாவின் ஆளுமை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

(20 புள்ளிகள்)

03. எது நல்ல சினிமா என்ற கட்டுரையை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.
   1. சினிமா மொழி
   2. குறியீட்டுப் பயன்பாடு

அல்லது

அற்றைத்திங்கள் என்ற நாடகத்தில்

1. போரின் கொடுரம்
2. புலம்பெயர்வால் ஏற்பட்ட துன்பம்
3. ஆசிரியரின் படைப்பாற்றல் என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

04. தத்தைவிடு தூது எனும் பாடத்திலிருந்து பின்வருவனவற்றை விளக்குக.
   1. பெண்கள் மீதான ஒடுக்குமுறை
   2. தலைவனின் தவிப்பு

அல்லது

நாவலர் எழுந்தார் எனும் கட்டுரையில்

1. நாவலரின் ஆளுமை
2. பிறிற்றோவின் தகுதியின்மை என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

- 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து விடை எழுதுக.

05. நாட்டார் பாடலில் தலைவிமீது தலைவன் கொண்ட அன்பு வெளிப்படும் விதத்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

06. குழந்தையென எனது மனம் குதூகளிக்கும் என்ற கவிதையில்
   1. முல்லைநிலச் சிறப்பு
   2. மருத நிலச் சிறப்பு

(10 புள்ளிகள்)

07. பேதைமை எனும் அதிகாரத்தில்
   1. பேதையின் இயல்பு
   2. பேதையர் அடையும் இடர் என்பவற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆண்டிறுதிப் பரீட்சை – 2023
தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் - 11
விடைகள்

பகுதி – I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 1 | 11 | 3 | 21 | 3 | 31 | 2 |
| 2) | 2 | 12 | 2 | 22 | 2 | 32 | 3 |
| 3) | 2 | 13 | 2 | 23 | 4 | 33 | 3 |
| 4) | 4 | 14 | 2 | 24 | 2 | 34 | 2 |
| 5) | 2 | 15 | 4 | 25 | 3 | 35 | 2 |
| 6) | 3 | 16 | 3 | 26 | 2 | 36 | 2 |
| 7) | 4 | 17 | 3 | 27 | 1 | 37 | 4 |
| 8) | 4 | 18 | 3 | 28 | 4 | 38 | 2 |
| 9) | 1 | 19 | 2 | 29 | 3 | 39 | 2 |
| 10) | 3 | 20 | 4 | 30 | 3 | 40 | 3 |

பகுதி – II

01.

I. உண்பதுவும் + உறங்குவதும் + ஊர் + கதைகள் + பேசுவதும்

II. வள்ளுவத்தில் ‘யாதானும் நாடாமல் ஊராமல்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

III. பெயர் - எனது அண்ணன் வெகு தொலைவில் (தூரம்) வேலை செய்கின்றார்.
வினை – அப்பா பரிசாக வழங்கிய கடிகாரத்தைத் தம்பி தொலைத்தான்

IV. விபுலானந்த அடிகளார் தாம் கற்றறிந்த விஞ்ஞானப் பெரும் புலமையைக் கொண்டும் கணித அறிவைக்கொண்டும் பல பெரும் ஆராய்ச்சிகளைச் செய்தார்.
வழு – எண்வழு

V. எழுவாய் - முகம், பயனிலை – மங்கியது

VI. அப்பா கட்டடத்தைக் கட்டுவித்தார்

VII. தலைமைத்தொடர் - ஆற்றைக் கடந்துபோவாய்
சார்புத் தொடர் - கவனமாக நடந்துவந்தால்

VIII. களித்து – வன்றொடர், வந்து – மென்றொடர்

IX. காளமேகப் புலவர் வித்துவச் செருக்குடையவர்.
காளமேகப்புலவர் வசைக்கவி பாடுவதில் வல்லவர்.

X. உள்முகவரி, தலைப்பு

02. பொருளமைவும் அளவும் - 12 புள்ளிகள்
கருத்துவெளிப்பாடும் மொழிச் செம்மையும் - 06 புள்ளிகள்
எழுத்து நுட்பங்கள் - 05
தலைப்பு – 02

03. தனிநாயகம் அடிகளாரின் பன்மொழிப்புலமையும் பிற பண்பாடும், மதிக்கும் தன்மையும் தமிழுக்கு அவர் ஆற்றிய தனித்துவம் வாய்ந்த இரண்டு வகையான தொண்டுகள்.
1. தமிழியல் துறையை சர்வதேச அறிவுத்துறையாக உயர்த்தியமை, அதன் பொருட்டு அடிகளார் ஆற்றிய பங்களிப்பு பலவாகும்.
2. சர்வதேச தமிழர் மத்தியில் ஒற்றுமை உணர்வை முதன்முதலாக வளர்க்க உதவியமை, ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த அவர் ஆற்றிய பணிகள்.

04. 1. பனையோலைகளில்
2. சந்ததியினர் கல்லாதவர்
3. எடுப்பார் இன்றி மடிந்துபோதல், செல்லரித்தல்
4. நூலை எழுதலோ எழுதுவித்தலோ மிகவும் கடினம்
5. மூவேந்தர்களும் வள்ளல்களும் இறந்தபின் தமிழ்நாட்டில் நிலைபெற்ற அரசாட்சி சீர்குலைந்தமை.

05. கடிதம்/ துண்டுப்பிரசுரம்

அமைப்பு – 05 புள்ளிகள்

உள்ளடக்கம் - 07 புள்ளிகள்

மொழிநடை – 03 புள்ளிகள்

## பகுதி – III

01.

i. அ) சிறிய மீனின் சினையை விடவும் சிறியது.

ஆ) தெள் + நீர்

ii. அ) தேர்ச்சில்லில் அகப்பட்ட பிராணி இழுபட்டுச்செல்வது போல தானும் தலைவி பற்றிய எண்ணத்தால் பின்னப்பட்ட மனதோடு இழுபட்டுச் செல்லல்.

ஆ) உவமையணி

iii. அ) நாத தத்துவம்

ஆ) பிரம்மன்

iv. அ) தசரதன்

ஆ) பிரம்மன்

v. அ) பயம்

ஆ) காசிம்

vi. அ) இடது கையின் பெருவிரலை ஊன்றியமை

ஆ) உணர்வற்ற சிரிப்பு

vii. அ) விரைவாய் ஊர்ந்து செல்லல், பழைமையான ஊர் அத்தினாபுரி

ஆ) துரியோதனன்

viii. அ) வீரமில்லாதவர்

ஆ) பெண்களை வீட்டில் அடைத்துவைத்தல்

ix. அ) கம்பியூட்டர்

ஆ) இரகசியம்

x. அ) இசைக்கலை, நடனக்கலை

ஆ) இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம்

திருத்தக்கதேவர் - சீவக சிந்தாமணி


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න